Q.C.032

**DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)**

| **Name of the Test:** | Departmental Test on Motor Vehicles Act and Rules for Transport Department staff (Without Books) | 007 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. Heavy Goods Vehicle means, the GVW of the vehicle will be above
சரக்கு வாகனத்தின் மொத்த வாகன எடை எந்த கி கி மேலிருந்தால் அது ஒரு கனரக சரக்கு வாகனம் ஆகும்

(A) 10000 Kgs
10000 கிகி

(B) 12000 Kgs
12000 கிகி

(C) 14000 Kgs
14000 கிகி

(D) 16200 Kg
16200 கிகி

2. Light Motor Vehicle Means for which GVW does not exceed
இலகுரக வாகனம் எனப்படுவது அதனுடைய மொத்த எடை எந்த கிகி-க்கு மிகாமல் இருக்க வேண்டும்

(A) 3000 Kg
3000 கிகி

(B) 5000 Kg
5000 கிகி

(C) 6500 Kg
6500 கிகி

(D) 7500 Kg
7500 கிகி

3. Maximum how many persons can travel in Motor Cab type of Contract Carriage, except driver
ஓட்டுநர் தவிர ஒரு மோட்டார் கேப் வகையான ஒப்பந்த ஊர்தியில் அதிகபட்சம் எத்தனை பேர் பயணிக்கலாம்?

(A) 3

(B) 4

(C) 5

(D) 6

4. Any Motor Vehicle which is constructed or adopted to carry more than 6 Persons, excluding the driver is called
எந்த ஒரு வாகனம், ஓட்டுநர் தவிர்த்து 6 பயணிகளுக்கு மேல் ஏற்றி செல்வதற்கு ஏதுவாகவும், வடிவமைக்கப்பட்டதாகவும் உள்ளதோ அவ்வாகனம்

(A) EIB
கல்வி நிறுவன வாகனம்

(B) Maxi cab
மேக்ஸி கேப்

(C) Motor Cab
மோட்டர் கேப்

(D) Omni Bus
ஆம்னி பஸ்

5. Which one is a Non-Transport Vehicle?
பின்வருவனவற்றுள் எது போக்குவரத்து அல்லாத வாகனம் ஆகும்

(A) EIB
கல்வி நிறுவன வாகனம்

(B) Goods Carriage
சரக்கு வாகனம்

(C) Motor Cycle for personal use
சொந்த உபயோகத்திற்கான மோட்டர் சைக்கிள்

(D) PSV
தனியார் நிறுவன வாகனம்

6. Maximum age Limit to apply for Driving License
ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான அதிகபட்ச வயது வரம்பு

(A) 55
55

(B) 65
65

(C) 70
70

(D) No age limit
வயது வரம்பு இல்லை

7. How many Driving Licenses one can have at a time?
ஒரு நபர் எத்தனை ஓட்டுநர் உரிமம் வைத்திருக்கலாம்?

(A) 3
3

(B) 2
2

(C) One for each Class of Vehicle
ஒவ்வொரு வாகன வகைக்கும் ஒன்று

(D) Only one
ஒரே ஒரு உரிமம்

8. The validity of Licence to drive a Transport Vehicle for carrying Goods of Dangerous or Hazardous nature is for a period of
ஒரு போக்குவரத்து வாகனத்தில் அபாயகரமான, ஆபத்து ஏற்படுத்தக் கூடிய பொருட்கள் எடுத்து செல்ல உரிமம் பெற்றவரின் உரிமம் செல்லுபடியாகும் கால வரம்பு

(A) 1 Year
1 வருடம்

(B) 2 Years
2 வருடங்கள்

(C) 3 Years
3 வருடங்கள்

(D) 5 Years
5 வருடங்கள்

9. If a person apply to renew Driving Licence after 30 days of its expiry the renewal period of that Licence will be effect
ஒரு நபரின் ஓட்டுநர் உரிமம் காலாவதியாகி 30 நாட்களுக்கு பிறகு புதுப்பிக்க விண்ணப்பித்தால் அந்த உரிமம் எந்த தேதியிலிருந்து பயன்பாட்டிற்கு வருகிறது

(A) From 30 days of its renewal
உரிமம் புதுப்பிக்கப்பட்ட 30-வது நாளிலிருந்து

(B) From the date of its renewal
உரிமம் புதுப்பிக்கப்பட்ட நாளிலிருந்து

(C) From the date of its expiry
உரிமம் முடிவுற்ற நாளிலிருந்து

(D) From the 31st of its expiry
உரிமம் முடிவுற்ற 31வது நாளிலிருந்து

10. If an applicant failed in consecutive 3 times of appearances in his Driving Ability Test, then he
ஓட்டுநர் உரிமம் பெறும் திறனாய்வு தேர்வில் ஒரு விண்ணப்பதாரர் தொடர்ச்சியாக 3 முறை தேர்ச்சி பெறவில்லையெனில், பின் அவர் கடைசியாக தேர்வுக்குட்பட்ட நாளிலிருந்து

(A) Can appear again after 7 days
மீண்டும் 7 நாட்களுக்கு பிறகு தேர்விற்கு வரவேண்டும்

(B) Can appear again after 30 days
மீண்டும் 30 நாட்களுக்கு பிறகு தேர்விற்கு வரவேண்டும்

(C) Can appear after 60 days
60 நாட்களுக்கு பிறகு தேர்விற்கு வரவேண்டும்

(D) Can appear again after 1 year
மீண்டும் ஓராண்டிற்கு பிறகு தேர்விற்கு வரவேண்டும்

11. "N3" category vehicle means
"N3" வாகனங்கள் எனப்படுவது

(A) Heavy Goods Vehicle
கனரக சரக்கு வாகனம்

(B) Heavy Passenger Vehicle
கனரக பயணியர் வாகனம்

(C) Medium Goods Vehicle
நடுத்தர சரக்கு வாகனம்

(D) Both Heavy Goods Vehicle and Heavy Passenger Vehicle
கனரக பயணியர் மற்றும் கனரக சரக்கு வாகனம்

12. A person who is having effective Learners Licence to drive a motor cycle with a side car attached with, is allowed to drive with
மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கு பழகுநர் ஓட்டுநர் உரிமம் பெற்ற ஒரு நபர் மோட்டர் சைக்கிளின் பக்கவாட்டில் இணைப்புப் பெட்டி வண்டியுடன் கூடியது ஓட்டிச் செல்லும்பொழுது

(A) A person in pillion and an instructor in the side car
ஒருவரை பின்னாலும் பயிற்றுவிப்பவரை பக்கவாட்டு பெட்டியிலும்

(B) An Instructor in pillion and a person in a side car
பயிற்றுவிப்பவரை பின்னாலும் மற்றவரை பக்கவாட்டிலும்

(C) A person in a side car
ஒரு நபரை பக்கவாட்டு பெட்டியிலும் ஏற்றி செல்லலாம்

(D) An Instructor in pillion
பயிற்றுவிப்பவரை பின்னாலும்

13. The medical certificate issued in form 1-A in valid upto
படிவம் 1-A ன் படி வழங்கப்படும் மருத்துவ சான்றிதழ் செல்லுபடியாகும் கால வரம்பு

(A) One year
ஒரு வருடம்

(B) 6 months
6 மாதங்கள்

(C) 3 months
3 மாதங்கள்

(D) One month
ஒரு மாதம்

14. An applicant for Learners Licence should answer correctly at least __________ % of questions put him.
பழகுநர் உரிமத்திற்கான தேர்வில் தேர்ச்சி பெற குறைந்தபட்சம் ————% கேள்விகளுக்கு சரியான பதிலளித்திருக்க வேண்டும்.

(A) 35%
(B) 50%
(C) 60%
(D) 70%

15. The validity of International Driving Permit is
பன்னாட்டு ஓட்டுநர் உரிமம் செல்லபடியாகும் கால வரம்பு

(A) 2 years
2 வருடங்கள்

(B) upto the Validity of Driving Licence
ஓட்டுநர் உரிமம் முடிவடையும் தேதி வரை

(C) One year or upto the validity of Driving Licence which ever is earlier
ஒரு வருடம் அல்லது ஓட்டுநர் உரிமம் முடிவடையும் தேதி, இதில் எது முன்னதோ அந்த காலம் வரை

(D) upto the Visa Validity
நுழைவு அனுமதி காலம் முடியும் வரை

16. As per the TNMVR, which cader of staff, cannot act As an Assistant Licencing Authority
தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளின் படி கீழ்வருவனவற்றுள் எந்த நிலை அலுவலர் உதவி உரிம அதிகாரியாக செயலாற்ற முடியாது

(A) PA to RTO
வட்டாரப் போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர்

(B) Superintendent
கண்காணிப்பாளர்

(C) Assistant
உதவியாளர்

(D) MVI Grade – II
மோட்டார் வாகன ஆய்வாளர் – நிலை – II

17. A certificate of Registration issued under section (3) of section 41 of Motor Vehicles Act, other than a Transport Vehicle is valid for a period of
மோட்டார் வாகன சட்டம் பிரிவு 41 உட்பிரிவு 3ன் கீழ் பதிவு செய்யப்பட்ட போக்குவரத்து அல்லாத வாகனத்தின் பதிவு சான்று செல்லுபடியாகும் காலம்

(A) 5 years
5 வருடங்கள்

(B) 10 years
10 வருடங்கள்

(C) 15 years
15 வருடங்கள்

(D) Life time
ஆயுட்காலம்

18. As per Motor Vehicles Act Section 41, renewal of Certificate of Registration, for non Transport vehicles will be valid for
மோட்டார் வாகன சட்டம் பிரிவு 41-ன் படி போக்குவரத்து அல்லாத வாகனங்களின் பதிவு சான்று புதுப்பிக்கப்பட்டால் செல்லுபடியாகும் கால அளவு

(A) One year
ஒரு வருடம்

(B) 2 years
2 வருடங்கள்

(C) 5 years
5 வருடங்கள்

(D) 15 years
15 வருடங்கள்

19. The Registration mark of Motor Vehicles of Diplomatic Officers will be Assigned By registering authorities of
டிப்ளமோட்டிக் அதிகாரிகளுடைய வாகனங்களின் பதிவெண்கள் எந்த பதிவு அதிகாரிகளால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது

(A) Central Government
மத்திய அரசு

(B) State Government
மாநில அரசு

(C) State Government in accordance with Central Government procedure
மத்திய அரசு வழிகாட்டுதலுடன் மாநில அரசு

(D) Home Ministry of Government of India
மத்திய அரசின் உள்துறை

20. As per Motor Vehicles Act A Diplomatic Officer means, recognized as such by the
மோட்டார் வாகன சட்டபடி டிப்ளமோடிக் அதிகாரி என்பவர் ———— ஆல் அங்கீகரிக்கப்பட்டவர்.

(A) Central Government
மத்திய அரசு

(B) State Government
மாநில அரசு

(C) Union Territory
யூனியன் பிரதேசம்

(D) Defence Department
இராணுவம்

21. A vehicle which is registered temporarily and temporary certificate of registration is valid upto
தற்காலிகமாக பதிவு செய்யப்பட்ட ஒரு வாகனத்தின் தற்காலிக பதிவு செல்லுபடியாகும் காலம்

(A) 1 month
ஒரு மாதம்

(B) 2 months
2 மாதங்கள்

(C) 6 months
6 மாதங்கள்

(D) till permanent registration
நிரந்தர பதிவு செய்யும் வரை

22. Subject to the provisions of section 47 of MV Act a certificate of registration issued in any state shall be effective
மோட்டார் வாகன சட்டப் பிரிவு 47 மற்றும் அதன் நிபந்தனைகளுடன், எந்த ஒரு மாநிலத்திலும் வழங்கப்பட்ட பதிவுச் சான்று செல்லுபடியாகும் இடம்

(A) Through out the state
மாநிலம் முழுவதும்

(B) Home state with adjoining 3 states
பதிவு செய்த மாநிலம் மற்றும் அதனை ஒட்டி அருகாமையிலுள்ள 3 மாநிலங்கள்

(C) Through out India
இந்தியா முழுவதும்

(D) Home state with any one of the adjoining state
பதிவு செய்த மாநிலம் மற்றும் அதனை ஒட்டி அருகாமையிலுள்ள ஏதாவதொரு மாநிலம்

23. When a Motor Vehicle registered in one state has been kept in another state, for a period exceeding __________ months, within such period he should apply for new registration mark.

ஒரு மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனத்தை, வாகன உரிமையாளர் வேறு மாநிலத்தில் வைத்திருக்கும் போது அந்த வாகனத்திற்கு ———— காலத்திற்கு மேல், புதிய பதிவெண் பெற விண்ணப்பிக்க வேண்டும்.

(A) 13 months
13 மாதங்கள்

(B) 12 months
12 மாதங்கள்

(C) 6 months
6 மாதங்கள்

(D) One month
ஒரு மாதம்

24. A owner of a Motor Vehicle when applying for the assignment of new registration u/s (1) of section 47 of MVAct, in a state other than the state of its registration, he should apply to the registering authority and that application shall be accompanied by

மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 47 உட்பிரிவு 1ன் படி வாகனத்தின் உரிமையாளர் தான் அவ்வாகனத்தை பதிவு செய்த மாநிலத்தில் அல்லாமல் வேறு மாநிலத்தில் புதிய பதிவெண் பெற விண்ணப்பிக்கும் போது சமர்பிக்க வேண்டிய ஆவணம்

(A) Sale certificate
விற்பனை சான்று

(B) Type of approval certificate
வாகன வகை அங்கீகார சான்று

(C) No objection Certificate
தடையில்லாச் சான்று

(D) Mode of transportation proof
வானகத்தை எடுத்து வந்ததற்கான சான்று

25. Change of residence or place of business has to be recorded in the Certificate of Registration within

இருப்பிட அல்லது தொழில் புரியும் விலாச மாற்றம் பதிவு சான்றில் ———— காலத்திற்குள் பதிவு செய்யப்பட வேண்டும்.

(A) 6 months
6 மாதங்கள்

(B) 3 months
3 மாதங்கள்

(C) 30 days
30 நாட்கள்

(D) 7 days
7 நாட்கள்

26. The registered owner need not get a NOC from the financier whose name is entered in Registration Certificate in force when he is applying for
ஒரு வாகனத்தின் உரிமையாளர், பதிவுச் சான்றில் நிதியாளரின் பெயர் பதிவு செய்யப்பட்டு, நடப்பில் உள்ள வாகனத்திற்கு, எந்த பணிக்காக விண்ணப்பிக்கும் போது வாகனத்தின் நிதியாளர் வசம் தடையில்லா சான்று பெற தேவையில்லை

(A) Duplicate Registration Certificate
நகல் பதிவு பெற

(B) New Registration Mark when move to another State
பிற மாநிலத்தில் புதிய பதிவெண்பெற

(C) Renewal of Permit
அனுமதி புதுப்பிக்க

(D) Payment of Tax
வாகனத்தின் வரி செலுத்த

27. Alteration in a Motor vehicle means
வாகன வகை மாற்றம் என்பது

(A) Change in the Structure of a vehicle
வாகன வடிவமைப்பில் மாற்றம்

(B) Replacement of vehicle
வாகன மாற்றம்

(C) Change in usage
வாகன பயன்பாட்டில் மாற்றம்

(D) Change in Floor platform
வாகனத்தின் தரை தள பலகை மாற்றம்

28. If a motor vehicle has been destroyed or has been rendered permanently incapable of use, the Registering Authority shall
ஒரு மோட்டார் வாகனம் அழிந்து விட்டாலோ அல்லது நிரந்தரமாகப் பயன்படுத்த இயலாமல் போனாலோ ஒரு பதிவு அதிகாரி அவ்வாகனத்தின்

(A) Suspend the permit for 4 months
அனுமதியை 4 மாதங்கள் தடை செய்ய வேண்டும்

(B) Impose fine to the Owner
உரிமையாளருக்கு அபராதம் விதிக்க வேண்டும்

(C) Cancel the Registration Certificate
பதிவு சான்று ரத்து செய்யப்பட வேண்டும்

(D) Cancel the Permit
அனுமதி ரத்து செய்ய வேண்டும்

29. A Certificate of Fitness issued U/s 56 of MVAct is valid __________ while it remains Effective.
ஒரு வாகனத்திற்கு மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 56-ன் கீழ் வழங்கப்பட்ட தகுதிச் சான்று, அது நடப்பில் இருக்கும்போது செல்லுபடியாகும் இடவரையானது

(A) In Jurisdictions of Original Registering Authority
அசல் பதிவு அதிகாரியின் ஆள்வரைக்குள்

(B) Throughout the Concerned State
சம்மந்தப்பட்ட மாநிலம் முழுவதும்

(C) Throughout India
இந்தியா முழுமைக்கும்

(D) In those places which is entered in the permit of the vehicle
அனுமதிச் சீட்டில் குறிப்பிட்டுள்ள எல்லைக்குள்

30. A Trade Certificate issued U/r 35 of CMVR is valid for __________ and shall be effective __________
மத்திய மோட்டார் வாகன விதி 35-ன் கீழ் வழங்கப்படும் வணிகச் சான்று __________ எல்லைக்குள் செல்லுபடியாகும்

(A) One month and throughout India
ஒரு மாதம் மற்றும் இந்தியா முழுவதுமான

(B) Six months and within jurisdiction of Registering Authority
ஆறுமாதங்கள் மற்றும் சான்று வழங்கிய பதிவு அதிகாரியின் ஆள்வரைக்குள்

(C) Twelve months and within area of Jurisdiction of Registering Authority
பன்னிரண்டு மாதங்கள் மற்றும் சான்று வழங்கிய பதிவு அதிகாரியின் ஆள்வரைக்குள்

(D) Twelve months and throughout India
பன்னிரண்டு மாதங்கள் மற்றும் இந்தியா முழுவதுமான

31. Form 23A in CMVR means
மத்திய மோட்டார் வாகன விதியின் படி 23A – படிவம் என்பது

(A) Certificate of Registration in electronic medium
மின்னணுவழி பதிவுச்சான்று

(B) Register of a motor vehicle
மோட்டார் வாகனத்தின் பதிவேடு

(C) Application for Registration of a motor vehicle
பதிவுச் சான்று பெறுவதற்கான விண்ணப்பம்

(D) Certificate of Fitness
வாகனத்தின் தகுதிச்சான்று

32. Renewal of Certificate fitness in respect of E – rickshaw and E-Cart shall be valid for
E–ரிக்ஷா மற்றும் E–கார்ட் வாகனத்தின் தகுதிச்சான்று புதுப்பித்தல் செல்லுபடியாகும் கால அளவு

(A) One year
ஒரு வருடம்

(B) 2 years
2 வருடங்கள்

(C) 3 years
3 வருடங்கள்

(D) 4 years
4 வருடங்கள்

33. In reserving a Registration number if it is not utilized by that person, the fee paid for reserving that number
முன் பதிவெண் பெறப்பட்ட ஒரு வாகனத்தின் உரிமையாளர் அந்த முன் பதிவெண்ணை பயன்படுத்தி கொள்ளவில்லையெனில், அதற்கு செலுத்தப்பட்ட கட்டணம்

(A) Will be refunded after six months
ஆறு மாதங்கள் கழித்து திரும்ப வழங்கப்படும்

(B) Can be utilized for other number for reservation
வேறு பதிவெண் பெற பயன்படுத்திக் கொள்ளலாம்

(C) Will be refunded after the last number in the serial exhausted
அந்த வரிசையின் கடைசி பதிவெண் வழங்கப்பட்ட பிறகு திரும்ப வழங்கப்படும்

(D) Will not be refunded
திரும்ப வழங்க இயலாது

34. As per the Rule 91 of TNMVR, how to allot a number totalling "8" to a Vehicle
மத்திய மோட்டார் வாகன விதி 91 ன்படி கூட்டுத்தொகை "8" வரக்கூடிய பதிவெண் எவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படுகிறது

(A) Randomly
ஒழுங்குமுறையின்றி

(B) On request only
வேண்டுகோள் அடிப்படையில்

(C) cannot be allotted
ஒதுக்கீடு செய்யபட இயலாது

(D) Randomly and on request it can be changed
ஒழுங்குமுறையின்றி மற்றும் தேவையின் அடிப்படையில் மாற்றிக் கொள்ளலாம்

35. The Form CR Temp. Means
படிவம் CR Temp எனப்படுவது

(A) Temporary certificate of Registration
தற்காலிக பதிவுச் சான்று

(B) Conductor Licence
நடத்துநர் உரிமம்

(C) Compounding Fee Register
இணக்கக் கட்டண பதிவேடு

(D) Check report templates
சோதனை அறிக்கையின் குறிப்பு வாசகங்கள்

36. The following type of Alteration is not allowed
கீழ் வருவனவற்றுள் எந்த வகை மாற்றத்திற்கு அனுமதியில்லை

(A) Passenger version to Goods version
பயணியர் வாகனத்திலிருந்து சரக்கு வாகனமாக மாற்றுதல்

(B) Chassis Alteration
அடிச்சட்ட மாற்றம்

(C) Engine Alteration
என்ஜின் மாற்றம்

(D) Colour of vehicle
வாகனத்தின் வண்ணம் மாற்றுதல்

37. As per TNMVR 112, the Registration Certificate can be suspended by the following Authority

த.நா.மோ.வா. விதி 112ன் படி பதிவுச் சான்று கீழ்கண்ட எந்த அதிகாரியால் தற்காலிக தடை செய்யப்படும்

(A) Regional Transport Authority

வட்டாரப் போக்குவரத்து அதிகாரி

(B) Secretary to Regional Transport Authority

வட்டாரப் போக்குவரத்து அதிகாரியின் செயலாளர்

(C) Registering Authority

பதிவு அதிகாரி

(D) State Transport Authority

மாநில போக்குவரத்து அதிகாரி

38. The Pollution under control Certificate issued u/r of TNMVR 116 -A shall be valid for a period of

த.நா.மோ. வா. விதி 116-A ன் படி வழங்கப்படும் மாசு கட்டுப்பாட்டுச் சான்று செல்லுபடியாகும் கால அளவு

(A) 6 months

6 மாதங்கள்

(B) 4 months

4 மாதங்கள்

(C) 3 months

3 மாதங்கள்

(D) 1 month

1 மாதம்

39. Any Transport vehicle shall at any reasonable time can be inspected by except

ஒரு போக்குவரத்து வாகனத்தை எந்த ஒரு தேவையான நேரத்திலும் ஆய்வு செய்ய கீழ்கண்ட எந்த அதிகாரியால் இயலாது

(A) Any Magistrate

எந்த ஒரு மாஜிஸ்ட்ரேட் (நீதித்துறை நடுவர்)

(B) Any police officer not below the rank of Inspector of Police

காவல் ஆய்வாளர் நிலைக்கு குறையாத ஒரு காவல் அதிகாரி

(C) Any police officer not below the rank of Sub-Inspector of Police

உதவி காவல் ஆய்வாளர் நிலைக்கு குறையாத ஒரு காவல் அதிகாரி

(D) Any inspecting officer of the Transport department

போக்குவரத்து துறையைச் சார்ந்த எந்த சோதனை அதிகாரியும்

40. If the vehicle is in a public place, when it is found to be unsafe the inspecting Officer shall issue a CFX notice, and
பொது இடத்தில் ஒரு வாகனம் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பது தெரியவந்தால் அதை அறிந்த ஆய்வு அதிகாரி, அவ்வாகனத்திற்கு CFX notice வழங்கி

(A) Detain the vehicle

கண்டிப்பாக வாகனத்தை கையகப்படுத்த வேண்டும்

(B) Ask the driver to stop this trip after completing it
ஓட்டுநரை அந்த நடையை முடித்துவிட்டு அந்த வாகனத்தை நிறுத்த ஆணையிட வேண்டும்

(C) Permit to drive at 15 km/hr speed to its immediate destination
வாகனத்தை 15 கி.மீ வேகத்தில் ஓட்டிச் சென்று உடனடியாக அருகாமையிலுள்ள இலக்கிற்கு சென்று நிறுத்த அனுமதிக்கலாம்

(D) Seize and suspend the Driving Licence
ஓட்டுநர் உரிமத்தை கைப்பற்றி தற்காலிக தடை செய்ய வேண்டும்

41. The following authority cannot suspend the Fitness Certificate
கீழ்கண்ட அதிகாரிகளில் யாருக்கு தகுதிச் சான்றை தற்காலிக தடை செய்ய அதிகாரம் இல்லை

(A) Any Registering Authority without Technical qualification

தொழில்நுட்ப தகுதி பெறாத எந்தவொரு பதிவு அதிகாரியும்

(B) Any Registering Authority with Technical qualification
தொழில்நுட்ப தகுதி பெற்ற எந்தவொரு பதிவு அதிகாரியும்

(C) Motor Vehicle Inspector, Grade-I and Motor Vehicle Inspector Grade-II
மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–II

(D) Assistant Registering Authority without Technical qualification
தொழில்நுட்ப தகுதி பெறாத உதவி பதிவு அதிகாரி

42. For which of the following vehicle permit is not needed
பின்வரும் எந்த வாகனத்திற்கு அனுமதிச் சீட்டு தேவையில்லை

(A) Auto Rickshaw
ஆட்டோ ரிக்ஷா

(B) Any Goods Vehicle with GVW less than 3000Kg
மொத்த வாகன எடை 3000 கிகி குறைவாக உள்ள சரக்கு வாகனம்

(C) Motor Cab
மோட்டர் கேப்

(D) Stage Carriage
தட பேருந்து

43. The Authority Granting Stage carriage Permit is
தடப் பேருந்து அனுமதி வழங்கும் அதிகாரி

(A) Regional Transport Officer
வட்டாரப் போக்குவரத்து அலுவலர்

(B) Secretary to State Transport Authority
மாநில போக்குவரத்து அதிகாரியின் செயலாளர்

(C) Regional Transport Authority and State Transport Authority
வட்டாரப் போக்குவரத்து அதிகாரி மற்றும் மாநில போக்குவரத்து அதிகாரி

(D) Committee of Regional Transport Authority and Regional Transport Officer
வட்டாரப் போக்குவரத்து அதிகாரி, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் ஆகியோர் உள்ளடங்கிய குழு

44. For renewing the permit, application should be made ____________ of the expiry of permit.
அனுமதி புதுப்பிப்பதற்கான விண்ணப்பம், அனுமதி முடிவடையும் காலத்தின் ———— விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

(A) Before 60 days
60 நாட்களுக்கு முன்பு

(B) Before 30 days
30 நாட்களுக்கு முன்பு

(C) Before 15 days
15 நாட்களுக்கு முன்பு

(D) On the day of expiry
முடிவடையும் நாளன்று

45. As per sec 72(2) in varying the Stage Carriage permit condition, it shall not be varied so as to alter the distance covered by the original route by more than
மோ.வா.ச. பிரிவு 72(2)ன் படி ஒரு தடப் பேருந்தின் அனுமதியில் வேறுபாட்டை அனுமதிக்கும்போது அந்த வேறுபாடானது, அதன் அசல் அனுமதியில் அனுமதிக்கப்பட்டுள்ள தடத்தின் தூரத்தில் ———— கி.மீக்கு மேல் மாறுதல் இருக்க கூடாது.

(A) 10 Km
10 கி.மீ

(B) 14 Km
14 கி.மீ

(C) 20 Km
20 கி.மீ

(D) 24 Km
24 கி.மீ

46. As per sec 81 (4) which of the following offence is not a criteria for Rejecting the renewal of the permit
மோ.வா.ச பிரிவு 81(4)ன் கீழ் அனுமதி புதுபித்தல் மறுப்பதற்கு கீழ்கண்டவற்றுள் எது காரணமாக முடியாது

(A) Without payment of Tax
வரி செலுத்தாமல் இருப்பது

(B) Driver Licence expired
ஓட்டுநர் உரிமம் காலாவதியாகியுள்ளது

(C) Plied on any unauthorized route
அனுமதியில்லாத தடத்தில் ஓட்டப்பட்டது

(D) Financial Condition of applicant
விண்ணப்பதாரரின் நிதிநிலைமை

47. Where a permit has been renewed U/s (81) after the expiry of the period thereof, such renewal shall have effect from the date of
மோ.வா.ச பிரிவு 81ன் கீழ் புதுபிக்கப்படும் ஒரு அனுமதியானது அந்த அனுமதி முடிவடையும் தேதிக்கு பின் புதுப்பிக்கப்பட்டால், அவ்வகையான புதுப்பித்தல் நடப்பிற்கு வரும் காலம்

(A) Date of Renewal application
புதுப்பிக்க விண்ணப்பித்த தேதியிலிருந்து

(B) Such expiry
அனுமதி முடிவடைந்த தேதியிலிருந்து

(C) Order of the Authority
அதிகாரி ஆணை வழங்கிய நாளிலிருந்து

(D) The fees paid for it
கட்டணம் செலுத்திய நாளிலிருந்து

48. A Temporary Permit issued u/s 87 shall not exceed for a period of not more than
மோ.வா.ச பிரிவு 87-ன் கீழ் வழங்கப்படும் ஒரு தற்காலிக அனுமதியானது செல்லுபடியாகும் அதிகபட்ச கால அளவு

(A) 2 months
2 மாதங்கள்

(B) 3 months
3 மாதங்கள்

(C) 4 months
4 மாதங்கள்

(D) 6 months
6 மாதங்கள்

49. What is time limit to appeal to State Transport Appellate Tribunal where a person aggrieved by an order of RTA of STA as the case may be
ஒரு வட்டாரப் போக்குவரத்து அதிகாரி அல்லது மாநில போக்குவரத்து அதிகாரியின் ஆணையினால் மனக்குறையுற்ற ஒரு நபர் மாநில போக்குவரத்து தீர்ப்பாயத்தில் முறையிட அனுமதிக்கப்பட்டுள்ள காலவரம்பு

(A) Within 7 days from the date of receipt of the order
ஆணை பெற்ற ஏழு நாட்களுக்குள்

(B) Within 15 days from the date of receipt of the order
ஆணை பெற்ற பதினைந்து நாட்களுக்குள்

(C) Within 30 days from the date of receipt of the order
ஆணை பெற்ற முப்பது நாட்களுக்குள்

(D) Within 40 days from the date of receipt of the order
ஆணை பெற்ற நாற்பது நாட்களுக்குள்

50. A Tourist permit issued to a motor cab shall be deemed to be invalid from the date on which the Motor Vehicle covered by the permit completes
சுற்றுலா அனுமதி பெற்ற ஒரு மோட்டார் கேப் வாகனத்திற்கு அந்த அனுமதி, வாகனத்தின் வயது ———— முடிவடைந்தபின் செல்லுபடியாகாது.

(A) 7 years
7 வருடங்கள்

(B) 8 years
8 வருடங்கள்

(C) 9 years
9 வருடங்கள்

(D) 12 years
12 வருடங்கள்

51. What will be the period of authorisation in Tourist Permit vehicles?
சுற்றுலா அனுமதி பெற்ற வாகனத்தின் அத்தாட்சி கால வரம்பு

(A) 6 months
6 மாதங்கள்

(B) 9 months
9 மாதங்கள்

(C) 2 years
2 வருடங்கள்

(D) One year
ஒரு வருடம்

52. The amount of fee for authorisation for a National Permit Goods vehicles is
தேசிய அனுமதி பெற்ற சரக்கு வாகனங்களின் அத்தாட்சி பெற கட்டணம்

(A) Rs. 1,000/-
ரூ. 1,000/-

(B) Rs. 5,000/-
ரூ. 5,000/-

(C) Rs. 10,000/-
ரூ. 10,000/-

(D) Rs. 16,500/-
ரூ. 16,500/-

53. Multi Axle Trailer means, a Trailer having more than
பல அச்சு இழுவை வண்டி என்பது எத்தனை அச்சுக்களுக்கு மேல் உள்ள இழுவை வண்டி ஆகும்

(A) One Axle
ஒரு அச்சு

(B) Two Axles
இரண்டு அச்சு

(C) Three Axles
மூன்று அச்சு

(D) Four Axles
நான்கு அச்சு

54. Carrying the Autorisation in the vehicle is one of the condition for
அத்தாட்சி சான்றை வாகனத்தில் எடுத்துச் செல்ல வேண்டும் என்பது கீழ்கண்ட எந்த வாகனத்தின் நிபந்தனைகளில் ஒன்று

(A) National Permit Vehicle
தேசிய அனுமதிச் சீட்டு பெற்ற வாகனம்

(B) Goods Carriage Permit Vehicle
அனுமதி சீட்டு பெற்ற சரக்கு வாகனம்

(C) Contract Carriage Permit Vehicle
அனுமதி சீட்டு பெற்ற ஒப்பந்த ஊர்தி

(D) Stage Carriage Vehicle
தடப் பேருந்து

55. Assistant Secretary of the State Regional Transport Authority is an officer in the rank of
மாநில போக்குவரத்து அதிகாரியின் உதவி செயலாளர் என்பவர், எந்த நிலையில் உள்ள அதிகாரி

(A) PA to STA
மாநில போக்குவரத்து அதிகாரியின் நேர்முக உதவியாளர்

(B) DTC in the Jurisdiction
அதிகார எல்லையில் உள்ள துணைப் போக்குவரத்து ஆணையர்

(C) PA to DTC
துணைப் போக்குவரத்து ஆணையரின் நேர்முக உதவியாளர்

(D) RTO
வட்டாரப் போக்குவரத்து அலுவலர்

56. Who is the CEO and Secretary to STA?
மாநில போக்குவரத்து அதிகாரியின் முதன்மைச் செயல் அதிகாரியும், செயலாளருமாக செயல்படகூடியவர்

(A) Regional Transport Officers and Additonal RTO's
வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் கூடுதல் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள்

(B) Deputy Transport Commissioners in Madras City
மெட்ராஸ் மாநகரத்தின் துணைப் போக்குவரத்து ஆணையர்கள்

(C) RTOs and Additional RTOs in Chennai City
சென்னை மாநகரத்தின் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் கூடுதல் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள்

(D) Joint Transport Commissioner in the Office of Transport Commissioner
போக்குவரத்து ஆணையர் அலுவலகத்திலுள்ள இணைப் போக்குவரத்து ஆணையர்

57. Collection of excess fare is one among the grounds on which of the following Permit application for renewal can be rejected
எந்த வாகனத்தின் அனுமதி புதுப்பித்தலை நிராகரிப்பதற்கு கூடுதல் கட்டணம் வசூலிப்பது ஒரு குற்றமாக கணக்கிடப்படும்

(A) Goods Carriage
சரக்கு வாகனம்

(B) Stage Carriage
தடப் பேருந்து

(C) Contract Carriage
ஒப்பந்த ஊர்தி

(D) Private Service Vehicle
தனியார் சேவை வாகனம்

58. The permit application form in respect of Goods Vehicle is
சரக்கு வாகன அனுமதி பெற விண்ணப்பப் படிவம்

(A) PEVA
(B) PSPLA
(C) GCPA
(D) PTA

59. As per TNMVR U/r 181, the time limit granted for the applicant to produce the Registration Certificate before the Transport Authority for getting a permit is
த.நா.மோ.வா. விதி 181-ன் படி அனுமதி பெற விண்ணப்பிக்கும் போது, பதிவு சான்றை சமர்பிக்க வழங்கப்பட்டுள்ள கால அளவு

(A) One month
ஒரு மாதம்
(B) 2 months
இரண்டு மாதங்கள்
(C) 3 months
மூன்று மாதங்கள்
(D) 4 months
நான்கு மாதங்கள்

60. General merchandise can be carried in which class of vehicle
பொது வாணிப சரக்கு கீழ்கண்ட எந்த வாகனத்தில் எடுத்துச் செல்லலாம்

(A) Stage Carriage
தடப் பேருந்து
(B) Contract Carriage
ஒப்பந்த ஊர்தி
(C) Goods Carriage
சரக்கு வாகனம்
(D) Private Service Vehicle
தனியார் சேவை வாகனம்

61. The Compounding fee for the offence of plying without payment of Tax or permit or over loading in Omni buses will be to a maximum of
ஆம்னி பேருந்துகள் வரி செலுத்தாமலோ, அனுமதியில்லாமலோ, அதிக ஆட்களை ஏற்றிக் கொண்டோ இயக்கப்பட்டால் அதற்கான அதிகபட்ச இணக்கக் கட்டண தொகை

(A) Rs. 6,000/-
ரூ. 6,000/-
(B) Rs. 8,000/-
ரூ. 8,000/-
(C) Rs. 9,000/-
ரூ. 9,000/-
(D) Rs. 10,000/-
ரூ. 10,000/-

62. A Goods carriage, carrying animal as per TNMVR 237 should not be driven in excess speed of
த.நா.மோ.வா. விதி 237-ன் படி சரக்கு வாகனத்தில் கால்நடைகளை ஏற்றிச் செல்லும்போது அவ்வாகனம் ———— கி.மீ வேகத்திற்கு மேல் இயக்கப்பட கூடாது.

(A) 20 Km/hr
20 கி.மீ/மணி

(B) 30 Km/hr
30 கி.மீ/மணி

(C) 40 Km/hr
40 கி.மீ/மணி

(D) 50 Km/hr
50 கி.மீ/மணி

63. Class label for inflammable gases will be
எளிதில் தீப்பற்றக்கூடிய வாயு பொருட்கள் ஏற்றிச் செல்லக் கூடிய வாகனத்தில் வரையப்பட்டிருக்க கூடிய வகை அடையாள முத்திரை எது

(A) Symbol (Flame):Black or white, Background Red
கருப்பு (அ) வெள்ளை வண்ணத்தில் தீ ஜூவாலை சின்னம், சிகப்பு நிற பின்னணியில்

(B) Symbol (Flame):Black or white, Background Blue
கருப்பு (அ) வெள்ளை வண்ணத்தில் தீ ஜூவாலை சின்னம், நீல நிற பின்னணியில்

(C) Symbol (Flame):Black or white, Background half white and half red
கருப்பு (அ) வெள்ளை வண்ணத்தில் தீ ஜூவாலை சின்னம், பாதி வெள்ளை மற்றும் பாதி சிவப்பு நிற பின்னணியில்

(D) Symbol (Flame):Black or white, Background white with vertical strips
கருப்பு (அ) வெள்ளை வண்ணத்தில் தீ ஜூவாலை சின்னம், வெள்ளை மற்றும் செங்குத்து கோடுகளுடன் பின்னணியில்

64. As per TNMVR 307 Rule the seating arrangements for Town Service except metropolitan routes can be arranged as (all facing forward)
த.நா.மோ.வா. விதி 307-ன் படி மாநகர வழித் தடங்களை தவிர்த்து நகரத் தட பேருந்துகளில் இருக்கை வசதி கீழ்கண்டவாறு அமைக்கலாம் (அனைத்து இருக்கைகளும் முன்னோக்கியவாறு)

(A) One on one side and one on other side
ஒரு புறம் ஒரு இருக்கை, மறுபுறம் ஒரு இருக்கை

(B) Two on one side and one on another side
ஒருபுறம் இரு இருக்கை, மறுபுறம் ஒரு இருக்கை

(C) Two on each side
இருபுறமும் இரண்டு இருக்கைகள்

(D) Three on one side only
ஒரு புறம் மட்டும் மூன்று இருக்கைகள்

65. The postal and Telegraphs departmental vehicles are painted with
தபால் மற்றும் தந்தி சேவை துறை வாகனங்களில் பூசப்பட்டிருக்க வேண்டிய வண்ணம்

(A) Maroon colour
அரக்கு

(B) White Colour
வெள்ளை

(C) Blue Colour
நீலம்

(D) Red Colour
சிவப்பு

66. The Inspection report of the vehicles involved in accident will be in form
வாகன விபத்தாய்வறிக்கை கீழ்கண்ட படிவத்தில் கொடுக்கப்படும்

(A) FIR

(B) VIR

(C) AIR

(D) MVIR

67. Which of the following is not a mode of despatch u/r TNMVR 430?
த.நா.மோ.வா. விதி 430-ன் படி கீழ்வருவனவற்றுள் எது ஒரு அனுப்புகை வழி அல்ல

(A) Handing over in person
நபரிடம் நேரிடையாக கொடுப்பது

(B) Handing over to any authorised Person
அத்தாட்சி உள்ள நபரிடம் நேரிடையாக கொடுப்பது

(C) Sending via e-mail
மின்னஞ்சல் மூலம் அனுப்புவது

(D) Sending it by Register post
பதிவு அஞ்சலில் அனுப்புவது

68. Form LR means
படிவம் LR என்பது

(A) Learners Licence
பழகுநர் உரிமம்

(B) Learners Register
பழகுநர் பதிவேடு

(C) Form of intimating of Renewal Driving Licence
ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தலை தகவல் அளிக்கும் படிவம்

(D) Application for duplicate LLR
நகல் பழகுநர் உரிமம் பெறும் விண்ணப்பம்

69. As per Sec 177, if no penalty has been provided for an offence, in General the fine for the first time offence will be
மோ.வா.ச பிரிவு 177-ன் படி ஒரு குற்றத்திற்கான அபராதம் நிர்ணயிக்கப்படாத நிலையில் பொதுவாக அந்த முதல் முறை குற்றத்திற்கான அபராதம்

(A) Five hundred only
ஐந்து நூறு ரூபாய் மட்டும்

(B) One hundred to Two hundred
நூறு ரூபாயிலிருந்து இருநூறு வரை

(C) One hundred to Three hundred
நூறு ரூபாயிலிருந்து முந்நூறு ரூபாய் வரை

(D) One hundred to Five hundred
நூறு ரூபாயிலிருந்து ஐநூறு ரூபாய் வரை

70.  The symbol is a narrow Road ahead, which is

 “குறுகிய சாலை முன்னே” என்பதை குறிக்கும் இந்த சின்னம் ஒரு

(A) Mandatory signal
உத்தரவு சின்னம்

(B) Informatory signal
தகவல் சின்னம்

(C) Cautionary signal
எச்சரிக்கை சின்னம்

(D) Class label
அடையாள சின்னம்

71. In the TNMV Taxation Act half year means
த.நா.மோ.வா. வரி சட்டத்தின் படி அரையாண்டு என்பது

(A) First or second 6 months of the Financial year
நிதியாண்டில் முதல் அல்லது இரண்டாவது ஆறு மாதங்கள்

(B) First or second 6 months of the Calendar year
நாட்காட்டி ஆண்டின் முதல் அல்லது இரண்டாவது ஆறு மாதங்கள்

(C) Any consecutive 6 months of the calendar year
நாட்காட்டி ஆண்டில் தொடர்ச்சியான ஏதாவது ஆறு மாதங்கள்

(D) Any consecutive 6 months of financial year
நிதியாண்டின் தொடர்ச்சியான ஏதாவது ஆறு மாதங்கள்

72. Levy of Tax for the purpose of implementation of various measures to control air pollution is
காற்று மாசுபடுவதை கட்டுப்பாட்டிற்குள் வைக்க எடுக்கப்படும் பல்வேறு நடவடிக்கைக்காக வசூலிக்கப்படும் வரியின் பெயர்

(A) Road Safety Tax
சாலை பாதுகாப்பு வரி

(B) Green Tax
பசுமை வரி

(C) Commercial Tax
வணிக வரி

(D) Service Tax
சேவை வரி

73. For a new motor cycle the rate of tax at the time of registration will be __________ of total cost of the vehicle.
ஒரு புதிய மோட்டர் சைக்கிள் பதிவு செய்யும் பொழுது அதற்கு விதிக்கப்படும் வரி அதனுடைய மொத்த விலையில் ———— ஆகும்.

(A) 6%
(B) 8%
(C) 10%
(D) 12%

74. The rate of tax for cars at the time of registration for the cost of vehicles exceeds 10 lakhs will be __________ of the cost of it.
ஒரு புதிய மோட்டார் கார் பதிவு செய்யும் பொழுது அதனுடைய விலை 10 இலட்சங்களை மிகுந்திருந்தால் அதற்கு விதிக்கப்படும் வரியானது அதனுடைய விலையில் ————% ஆகும்.

(A) 8%
(B) 10%
(C) 12%
(D) 15%

75. Form 6 and Form 7 are connected with
படிவம் 6 மற்றும் 7 என்பவை

(A) Driving Licence
ஓட்டுநர் உரிமத்துடன் தொடர்புடையவை

(B) Learners Licence
பழகுநர் உரிமத்துடன் தொடர்புடையவை

(C) Registration Certificate
பதிவுச் சான்றுடன் தொடர்புடையவை

(D) Certificate of fitness
தகுதிச்சான்றுடன் தொடர்புடையவை

76. Form 21 in CMVR means
ம.மோ.வா. விதியின் படி படிவம் 21 என்பது

(A) A body builder Certificate
கட்டுமானச் சான்று

(B) Sale Certificate
விற்பனைச் சான்று

(C) Certificate of Fitness
தகுதிச் சான்று

(D) Certificate of Road Worthyness
சாலையில் செல்லுவதற்குரிய சான்று

77. Every Goods Vehicle other than three wheelers and vehicles with overall width not exceeding 2.1 meters shall be fitted with two lights in the top right and top left corner of the vehicle, showing ____________ colour front side.
மூன்று சக்கரமுடைய மற்றும் மொத்த அகலம் 2.1 மீட்டருக்குள் உள்ள வாகனங்களை தவிர்த்து மற்ற அனைத்து சரக்கு வாகனங்களுக்கும் வாகனத்தின் முன்புறம் மேல்பகுதியில் வலது மற்றும் இடது பக்கங்களில் ———— வண்ணம் முன்புறம் தெரியும் வகையில் விளக்குகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(A) Red
சிவப்பு

(B) Blue
நீலம்

(C) White
வெள்ளை

(D) Green
பச்சை

78. The mass emission norms for the vehicles coming at the time of registration should be
புதிதாக பதிவு செய்ய வரும் வாகனத்தின் மாசு கட்டுப்பாட்டு அலகு ———— ஆக இருக்க வேண்டும்.

(A) BS-II

(B) BS-III

(C) BS-IV

(D) BS-V

79. Construction Equipment vehicle is a
கட்டுமான தளவாடங்கள் அடங்கிய வாகனம் என்பது

(A) Non-Transport
போக்குவரத்து அல்லாத வாகனம்

(B) Transport
போக்குவரத்து வாகனம்

(C) Both Transport and Non Transport
போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனம்

(D) Not a motor vehicle
மோட்டார் வாகனம் அல்ல

80. The number plates for the rent a cab scheme vehicels shall be
"ரென்ட் எ கேப்" திட்டத்தில் உள்ள வாகனங்களின் பதிவெண் பலகைகளில் வண்ணம்

(A) Black letters in white Background
வெள்ளை பின்னணியில், கருப்பு எழுத்துக்கள்

(B) Black letters in yellow Background
மஞ்சள் பின்னணியில், கருப்பு எழுத்துக்கள்

(C) Yellow letters in Black Background
கருப்பு பின்னணியில், மஞ்சள் எழுத்துக்கள்

(D) White letters in Black Background
கருப்பு பின்னணியில், வெள்ளை எழுத்துக்கள்

81. In registration marks which one of the following alphabet is not used
பதிவெண்களில் கீழ்வரும் எந்த எழுத்து பயன்படுத்தப்படுவதில்லை

(A) G
(B) N
(C) C
(D) I

82. As per TNMVR 230 if a person is above twelve years of age he shall be charged with
த.நா.மோ.வா விதி 230ன் படி ஒரு நபர் பன்னிரண்டு வயதிற்கு மேல் இருந்தால் அவரிடம் ———— கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

(A) Full fare
முழு கட்டணம்

(B) 3/4 of full fare
3/4 கட்டணம்

(C) 1/2 of full fare
1/2 கட்டணம்

(D) 1/4 of full fare
1/4 கட்டணம்

83. The Public stands in this state are classified in to ____________ categories as per The amenities provided.
நமது மாநிலத்திலுள்ள பொது பேருந்து நிலையங்கள் அந்த நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள வசதிகளை பொறுத்து ———— வகைகளாக வகைபடுத்தப்பட்டுள்ளது.

(A) 3
(B) 4
(C) 5
(D) 6

84. As per CMVR 93 the overall height of a motor vehicle other than a double decked transport vehicle shall not exceed
ம.மோ.வா. விதி 93ன் படி ஒரு இரட்டை அடுக்கு வாகனங்களை தவிர ஒரு மோட்டார் வாகனத்தின் அதிகபட்ச உயர வரம்பு

(A) 1.8 m
1.8 மீ

(B) 2.5 m
2.5 மீ

(C) 3.8 m
3.8 மீ

(D) 4.75 m
4.75 மீ

85. ABS in breaking system means
"ABS" பிரேக்கிங் சிஸ்டம் எனப்படுவது

(A) Advanced Breaking System
அட்வான்ஸ்டு பிரேக்கிங் சிஸ்டம்

(B) Automatic Breaking System
ஆட்டோமேட்டிக் பிரேக்கிங் சிஸ்டம்

(C) Aligned Breaking system
அலைண்டு பிரேக்கிங் சிஸ்டம்

(D) Anti-lock Breaking System
ஆன்ட்டிலாக் பிரேக்கிங் சிஸ்டம்

86. The visual transmission of light through the windscreen glass should not be Less than
ஒரு காற்றுத்தடை கண்ணாடியின் ஒளி ஊடுறுவும் திறன் —————% ற்கு கீழ் இருக்க கூடாது.

(A) 60%

(B) 70%

(C) 80%

(D) 90%

87. The direction indicator lamps should be in the colour of
திசை காட்டும் விளக்கின் வண்ணமானது

(A) Amber
மஞ்சள்

(B) Red
சிவப்பு

(C) Blue
நீலம்

(D) Green
பச்சை

88. The maximum permissible speed of a Transport vehicels is
ஒரு போக்குவரத்து வாகனத்தின் அதிகபட்ச வேக வரம்பு

(A) 65 Km/hr
(B) 75 Km/hr
(C) 80 Km/hr
(D) 100 Km/hr

89. Under which section of Motor Vehicles Act the assignment of new registration mark on removal to another state be made
பிற மாநில வாகனங்களுக்கு புதிய பதிவு எண், பின்வரும் எந்த மோட்டர் வாகன சட்டப் பிரிவு படி வழங்கப்படுகிறது

(A) 47
(B) 23
(C) 18
(D) 13

90. Under which Rule of T.N. Motor Vehicles Rule the orders of delegation made by the RTA, shall be published
வட்டாரப் போக்குவரத்து அதிகாரியால் அளிக்கப்படும் அதிகார ஒப்பளிப்பு என்பது பின்வரும் எந்த த.நா. மோட்டர் வாகன விதியின்படி அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட வேண்டும்

(A) Rule 134
விதி 134
(B) Rule 144
விதி 144
(C) Rule 141
விதி 141
(D) Rule 143
விதி 143

91. Which one of the following is Non-Transport vehicle?
பின்வருவனவற்றில் எது போக்குவரத்து அல்லாத வாகனம்

(A) Omni bus
ஆம்னி பேருந்து
(B) Fork Lift
போர்க் லிப்ட்
(C) E.I.B
கல்வி நிறுவன வாகனங்கள்
(D) Auto rickshaw
ஆட்டோ ரிக்ஷா

92. Under which Rule of T.N. Motor Vehicles Rules the certified copy be issued in State Transport appellate Tribunal
பின்வரும் எந்த த.நா.மோட்டார் வாகன விதியின்படி, சான்றளிக்கப்பட்ட நகல் மாநில போக்குவரத்து மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தில் வழங்கப்படுகிறது

(A) Rule 134
விதி 134

(B) Rule 144
விதி 144

(C) Rule 141
விதி 141

(D) Rule 161
விதி 161

93. Affixing of Photograph to Medical Certificate is mandatory under which one of the following Central Motor Vehicles Rules
பின்வரும் எந்த மத்திய மோட்டார் வாகன விதியில் மருத்துவ சான்றில் புகைப்படம் ஒட்டுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது

(A) Rules 7
விதி 7

(B) Rule 17
விதி 17

(C) Rule 21
விதி 21

(D) Rule 161
விதி 161

94. What is Form 24?
படிவம் 24 என்பது

(A) C.F. Register
தண்டனை பதிவேடு

(B) Register of Motor Vehicle
வாகனங்களின் பதிவேடு

(C) F.C watch Register
தகுதிசான்று கண்காணிப்பு பதிவேடு

(D) Impounding Register
வாகன முடக்க பதிவேடு

95. A Transport vehicle shall not be deemed to be validly registered, under the purpose of section 39 of Motor Vehicles Act 1988, unless it carries
1988 மோட்டார் வாகன சட்டப் பிரிவு 39ன் படி, இது வைத்திருக்கவில்லையெனில் ஒரு போக்குவரத்து வாகனம் செல்லத்தக்க பதிவு செய்திருப்பதாக கருதபடமாட்டாது

(A) Tax Token
வரி வில்லை

(B) Registration certificate
பதிவுச் சான்று

(C) Permit
அனுமதி சீட்டு

(D) Certificate of Fitness
தகுதிச் சான்று

96. What is the Form Number of application for the Registration of motor vehicle by or on behalf of a diplomatic consular?
தூதரக அலுவலரால் அல்லது அவரது சார்பில் வாகன பதிவு விண்ணப்பத்திற்குரிய படிவம் எண் என்ன?

(A) Form 4
படிவம் 4

(B) Form 39
படிவம் 39

(C) Form 41
படிவம் 41

(D) Form 42
படிவம் 42

97. What is the Form Number for Letter of Authority issued to authorized testing station?
அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனை மையத்திற்கு வழங்கப்படும் அதிகார கடிதத்திற்கான படிவ எண் என்ன?

(A) Form 33
படிவம் 33

(B) Form 35
படிவம் 35

(C) Form 36
படிவம் 36

(D) Form 39
படிவம் 39

98. What is the form no of application, for the grant of No Objection Certificate?
தடையில்லாச் சான்று வழங்குவதற்கான விண்ணப்பப் படிவம் எண் என்ன?

(A) Form 28
படிவம் 28

(B) Form 29
படிவம் 29

(C) Form 30
படிவம் 30

(D) Form 31
படிவம் 31

99. What is the CMV Rule for 'Size of Letters and numerals of the registration mark'?
வாகன பதிவு எண்ணுக்குரிய எண் மற்றும் எழுத்தின் அளவுக்கான மத்திய மோட்டார் வாகன விதி எண் என்ன?

(A) CMV Rule 51
மை.மோ.வா.விதி 51

(B) CMV Rule 52
மை.மோ.வா.விதி 52

(C) CMV Rule 55
மை.மோ.வா.விதி 55

(D) CMV Rule 57
மை.மோ.வா.விதி 57

100. Form for Application for the issue of Duplicate Registration certificate?
நகல் பதிவுச் சான்று வழங்குவதற்கான விண்ணப்பப் படிவம்

(A) Form 25
படிவம் 25

(B) Form 26
படிவம் 26

(C) Form 27
படிவம் 27

(D) Form 28
படிவம் 28